# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 67 — 1973 ජූලි 06 වැනි සිකුරාදා — 1973.07.06

67 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூலை மாதம் 06 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 639 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 651 |


## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நீதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தாப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/ உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/ சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

வ. டபிள்யூ. டீ. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்

அரசாங்க அச்சகத் திணைக்களம்
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் த.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், இயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, வார்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழித்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் அவர் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்கள் அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றேவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்றும் பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதில் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

இல : ஈ. எஸ். 1/16/2

## பொறியியற் சேவைச் சபை

### இலங்கைப் பொறியியற் சேவை 3 ஆம் வகுப்பு நாவிதப் பொறியியலாளர்க்கான வெற்றுப் பதவி

இலங்கைப் பொறியியல் சேவை 3 ஆம் வகுப்பில் நாவிதப் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொறியியற் சேவைச் சபை அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர், பொறியியற் சேவைச் சபை, செயலகம், கொழும்பு 1 என்னும் முகவரியை, 1973 யூலை மாதம் 25 ஆந் நாளன்றோ அதற்கு முன்னரோ வந்தடைதல் வேண்டும்.

குறிப்பு.—(1) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்பவர் 9″ × 4″ அளவுக்குக் குறையாத முத்திரையிடாத உறையில் தமது சொந்த முகவரியை எழுதி அனுப்புவதுடன் அப்பரீட்சார்த்தி அரசாங்க சேவையிலுள்ளவரோ அன்றோ என்பதையும் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவர்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்

(1) பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியத்துக்குரிமையற்றவையுமாகும். அரசாங்கச் சேவைச் சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்தப்படும்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் தீவின் எப்பகுதியிலும் சேவை செய்யுமாறு கேட்கப்படின் அவ்வாறு சேவை செய்தல் வேண்டும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் 1972.03.14 ஆந் தேதியில் 15,001/8 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட இலங்கைப் பொறியியற் சேவைப் பிரமாணக் குறிப்பு அட்டவணையில் III ல் காட்டப்பட்டுள்ள இயந்திரப் பொறியியல் தொகுதிகளில் நியமிக்கப்படுபவர். எனினும், முதல் எட்டு ஆண்டுகளில் உத்தியோகத்தர்கள் மற்றொரு தொகுதிக்குத் தற்காலிகமாக மாற்றப்படுவதற்கு ஆளாவர்.

(4) பிற நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்

1972.03.14 ஆந் தேதியின் 15,001/8 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியற் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் விதித்துள்ளவற்றுக்கேற்றனவாயிருக்கும்.

3. சம்பள அளவுத் திட்டம்

இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்க 8,160 ரூபா—360 ரூபாவில் 3—9,240 ரூபா/9,960 ரூபா—360 இல் 3—11,040 ரூபா—480 இல் 13—17,280 ரூபா ஆண்டொன்றுக்கு 9,960 ரூபாவுக்கும் 13,920 ரூபாவுக்கும் முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.

குறிப்பு.—(1) முழு உயர் தொழில் தகைமையுடைய பரீட்சார்த்திகள் ஆண்டொன்றுக்கு மேற்கூறிய சம்பள அளவுத்திட்டத்தில் 10,320 ரூபா தொடக்கச் சம்பளத்தில் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவர்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் ஆண்டொன்றுக்கு 9,960 ரூபா பெறுவதற்கு முன்னர் 1 ஆம் வினைத்திறமைகாண் தடைக்குமேல் பதவியேற்றம் பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள ஒரு சோதனையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். இச்சோதனையின் பாடவிதானமும் திட்டம் பொறியியல் சேவைச் சபையினால் விதிக்கப்படும்.

முழு உயர்தொழில் தகைமையுடன் சேவையிற் சேரும் பரீட்சார்த்தி நியமன நாளிலிருந்து ஈராண்டுக்காலத்துள் இச்சோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி ஆண்டுக்கு 13,920 ரூபாவுக்கு முன்னருள்ள 2 ஆம் வினைத்திறமைகாண் தடைக்கு மேல் பதவியேற்றத்துக்கான தகைமை பெறுவதற்கு பொறியியல் சேவைச் சபையினால் விதிக்கப்பட்ட முழு உயர்தொழில் தகைமை பெறுமாறு வேண்டப்படுவர்.

(4) அரசாங்க சேவையில் ஏலவேயுள்ளவரான தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவரின் சம்பளம் அரசாங்கத்தாபனக் கோவையின் 7 ஆம் அத்தியாயத்திலுள்ள விதிகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

4. *தகைமைகள்*

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் சமர்ப்பிக்க வேண்டிய திருத்திகரமான சான்று, அவர்,

(1) சிறந்த நற்குணம் உடல் நலமும் உடையவர் ;

(2) 1973 யூலை மாதம் 25 ஆந் தேதியில் 21 வயதிற்குட்படாதவராயும், 35 வயதிற்கு மேற்படாதவராயும் உள்ளவர் (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது).

(3) எம். ஓ. ரி. 2 ஆம் வகுப்பு சான்றிதழைப் பெற்றுள்ளவராக அல்லது உயர்தர நாவிதப் பொறியியல் பரீட்சைச் சான்றிதழ் பெற்றுள்ளவராகவோ இருத்தல் வேண்டும்.

5. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும் பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய திட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு, இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தாலாகாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது, அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய தேதியை பொறியியற் சேவைச் சபைப் பணிப்பாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் பணிப்பாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('ஆ' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் பணிப்பாளர், பொறியியற் சேவைச் சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலாளருக்காயினும் நேராக அனுப்புதலாகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்தச் செய்திமடலில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('அ' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதனுள் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெறப்பட்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக்கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவித்தலைப் பெறுவிடின் உடனே பொறியியற் சேவைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக்கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டி. எச். சிறிவர்த்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

பொறியியற் சேவைச் சபை அலுவலகம்,
செயலகம்,
கொழும்பு 1,
1973, ஜூன் மாதம் 20 ஆந் தேதி.

7–11—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி

வர்த்தக அத்தியட்சகர் பதவி

இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி வர்த்தக அத்தியட்சகர் பதவிக்கென இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தினுல் வழங்கப்பட்ட அச்சிட்ட படிவங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் திகதிகளில் அல்லது அத்திகதிகளுக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 1973, ஜூலை மாதம் 31 ஆந் தேதி ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1973, ஆகஸ்ட் மாதம் 10 ஆந் தேதி.

**குறிப்பு.**—(i) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்திற்கான கோரிக்கைகள் 9" × 4" அளவிற்குக் குறையாத அளவையுடையதும் சொந்த விலாசமிடப்பட்டதும் முத்திரையிடப்படாததுமான கடிதவுறையில் வைத்து தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லது இல்லாதவரா என்பதைக் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அது சம்பந்தமான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்பன போன்ற குற்றச்சாட்டுகள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் தினம் வரை தாமதிக்கும் அபேட்சகர்கள் அதனுல் ஏற்படும் தாமதத்திற்குத் தாமே பொறுப்பாளியாவர்.

(iii) வெளிநாட்டு விண்ணப்பதாரிகள், வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரலுவலகத்திலிருந்து அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவர்கள் விரும்பினுல் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிலுள்ள அல்லது அந்நாட்டிற்கு மிகவண்மையில் உள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கைக் குடியரசுத் தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பி வைக்கலாம்.

(iv) **வைத்தியப் பரிசோதனையும் பயணச் செலவுகளும்.**—இலங்கைக் குடியரசில் நியமிக்கப்படும் பொருட்டு வெளிநாடுகளிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் இச் சேவையை ஆற்றுவதற்கான உடல்நலமுடையவராவென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட வைத்திய தொழில் நடத்துபவர்களினுல் வைத்தியப் பரிசோதனை செய்து கொள்ளுமாறு வேண்டப்படுவார்கள். இவ்வைத்தியப் பரிசோதனைக்கான கட்டணங்களும் இலங்கைக்கு வருவதற்கான பயணச் செலவுகளும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே செலுத்த வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும், ஆனுல் இளைப்பாற்றுச் சம்பள உரித்தற்றதுமாகும். தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்த வேண்டும். (ஏற்கனவே இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய நிரந்தரமான பதவியை வகித்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தால் அதே திட்டத்திலேயே அவர் நியமிக்கப்படுவார்.) நியமனம் பெறுபவர் நிரந்தரமான அரசாங்க பதவியை வகிக்காதவராக இருக்குமிடத்து, ஆரம்பத்தில் மூன்று வருட காலம் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

பிறவற்றுடன் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் தேறுவதைப் பொறுத்து பதவி உறுதிப்படுத்தப்படும். அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் விடயத்தில் சில காலம் பதில் அத்தியட்சகராக அவர் நியமிக்கப்படுவார்.

தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் பின்வருவனவற்றின் தொழிற்பாட்டு அறிவை நியமிக்கப்பட்டு பன்னிரண்டு மாதங்களுக்குள் பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (இவ்வறிவு வாய்மொழி மூலம் அல்லது எழுத்துப் பரீட்சை மூலம் பரீட்சிக்கப்படும்).

(அ) புகையிரதத் திணைக்களத்தின் தொழிற்பாட்டு வர்த்தக முயற்சிகளின் பொருட்டான விதிகள், பிரமாணங்கள் புகையிரதத் திணைக்கள பணித்தல்கள் (நிருவாகம்) புகையிரதத் திணைக்களத்திற்கு பிரயோகிக்கப்படக்கூடிய தாபனக் கோவையிலுள்ள பிரமாணங்கள், அரசாங்க சேவைக் குழு விதிகள், நிதிப்பிரமாணங்கள் முதலியன.

(ஆ) இத்தீவிலுள்ள பஸ்கள், உலொறிகள் ஆகியவற்றினதான சேவைகளின் பொருட்டு தொழிற்பாட்டுக்கெனப் பிரயோகிக்கப்படும் போக்குவரத்துச் சட்டங்களும் பிரமாணங்களும்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிகளுக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு, ரூ. 17,040—600—ரூ. 18,840, (பழைய உத்தியோகத்தர்கள் பவுண் 1,000—40—பவுண் 1,200).

4. தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகர்களாலும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று அளிக்கப்படல் வேண்டும்.

(அ) சிறந்த பண்பும் உடல்நலமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1973, ஜூலை 31 இல் அவர் 35 வயதிற்குக் குறையாதவராகவும் 50 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி (பொருளியலுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்) அல்லது இலண்டன் போக்குவரத்து நிலையத்தின் துணை நிலை உறுப்பினர் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் அரசாங்கத்தில் கூட்டுத் தாபனத்தில் 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் பொறுப்பான பதவி வகிப்பவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) போக்குவரத்தின் நவீன நிலைமைகளை நன்கு அறிந்தவராகவும் கொம்பனிச் சட்டத்திலும் வர்த்தகப் புள்ளி விபரங்களிலும் தொழிற்பாட்டு அறிவை உடையவராகவும் அதிகரித்துவரும் புகையிரதத் திணைக்கள போக்குவரத்தினதும் அரசிறையினதும் வழிமுறைகளை அமைப்பதற்கான ஆற்றல் உடையவராகவுமிருத்தல் வேண்டும். விளம்பரப் படுத்தல் தொழில்முறைகள் பொதுமக்கள் தொடர்பு வேலை என்பனவற்றின் தற்போதைய நடைமுறையில் தொழிற்பாட்டு அறிவு மேலதிகத் தன்மையாகக் கருதப்படும்.

ஆகக் குறைந்தது ஐந்து வருடங்கள் உயர் பதவி உத்தியோகத்தராகப் பதவி வகித்து 15 வருடங்களுக்குக் குறையாமல் அரசாங்க சேவையில் கடமையாற்றிய, புகையிரதத் திணைக்களத்தின் வர்த்தகம் சம்பந்தமான சிறந்த அறிவுடைய உத்தியோகத்தர்கள் மேற்படி வயது, தகைமைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்காவிடினும் அவர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இத்தகைய அபேட்சகர்கள் தெரிவு செய்யப்பட்டால் திறைசேரிப் பணித்தல்களின் பிரகாரம் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் பத்திரங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிநன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் அல்லது மிகவுயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) பண்புபற்றிய இரு சான்றிதழ்கள், இவற்றிலொன்று கல்விப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாகவிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இவ்விரு சான்றிதழ்களும் ;

(உ) சிங்களமொழியில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைக்கான சான்றிதழ்.

குறிப்பு.—(i) இவ்விண்ணப்பப் படிவத்துடன் பத்திரங்கள் அல்லது அவற்றின் பிரதிகள் எதுவும் இணைக்கப்படலாகாது.

(ii) பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்போது சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் திணைக்களத் தலைவர்களூடாக அனுப்பப்படல் வேண்டும். எனினும் அவர்கள் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்கசேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேரடியாக அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் (" ஆ " எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை இதன் பொருட்டுப் பயன்படுத்தலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதங்களும் இத் திணைக்களத்தின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்கள உத்தியோகத்தர் வேறு எவருக்காவது நேரடியாக அனுப்பிவைக்கக்கூடாது.

8. மற்றும் விபரங்களுக்கு இவ்வர்த்தமானியின் I ம் பகுதி (IIஅ) ம் தொகுதியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அபேட்சகர்களுக்கு வழங்கப்படும் (" அ " எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை அதில் குறிப்பிடப்பட்டது போல நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அவர்களுக்கு அறிவிக்கப்படும். இக் கோரிக்கையின் பிரகாரம் நடந்துகொள்ளத் தவறிய அபேட்சகர்களுக்கு விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இக் கோரிக்கையின் பிரகாரம் நடந்துகொண்டவர்கள் முடிவுத் திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் விண்ணப்பங்கள் கிடைத்தமைக்கான அறிவித்தல் கிடைக்காதிருந்தால் அது பற்றித் தொலைதொடர்பு அமைச்சின் செயலாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தினை கவனிக்குமாறு கோருவதற்கான உடையவராக இருத்தல் வேண்டும் :

கே. சி. எப். விஜயவிக்கிரம,
செயலாளர்,
தொலை தொடர்பு அமைச்சு.

தொலை தொடர்பு அமைச்சு,
கொழும்பு 1,
25.6.1973.

7–70—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

கட்டடங்கள் திணைக்களம்

இரண்டாந்தர படவரைஞர் பதவிகள்

இலங்கைக் குடிகளிடமிருந்து இரண்டாந்தர படவரைஞர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் மேற்படி திணைக்களத்தினால் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 18.07.1973 திகதியன்றோ அதற்குமுன்போ கட்டடங்கள் பணிப்பாளர், கிளை 'எம்சு' கட்டடங்கள் திணைக்களம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

2. சம்பளம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றிற்கு ரூபா 3,576—144 × 20—6,456 ஆகும்.

3. வயதெல்லை.—18.07.1973 இல் 18 வயதுக்கு மேற்பட்டதாகவும் 40 வயதுக்குட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

தேவைப்படும் கல்வியும் மற்றைய தகைமைகளும்.—(1) சிரேட்ட பாடசாலைத் தாரதரப்பத்திரத்தில் கணிதம் உட்பட சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். அல்லது சிங்களம்/தமிழ்ப் பாஷை, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றிப்பெற்ற கல்விப் பொதுத் தாரதரப் பத்திரம் (சாதாரணம்) அத்துடன் பின்வரும் தகைமைகளிலொன்றையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(அ) புகழ்பெற்ற பொறியியல் தாபனமொன்றில் அல்லது பட்டயம் பெற்ற பொறியியலாளர்களிடம் அல்லது சிற்பிகளிடம் ஒழுங்

காக நான்குவருட தொழில் பயிலுநராக சேவையாற்றியும், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் பல்வேறு தரங்களிலும் 3 வருட மாலை நேர வகுப்புக்களில் பயின்றவராகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய தகைமைகளையுடைய ஒரு பரீட்சார்த்தியை ஆண்டொன்றுக்கு ரூபா 3,864 க்கு மேற்படாத சம்பள அளவுத் திட்டத்தில் நியமிப்பதற்குக் கவனிக்கப்படும் ; அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக்கல்லூரியில் 1947 க்கு முன்னர் நடைபெற்ற கட்டட அமைப்பு கட்டம் II பரீட்சையில் சித்தியடைந்து புகழ்பெற்ற வர்த்தகத்தாபனமொன்றில் அல்லது அரசாங்கத் திணைக்களத்தில் 2 வருடங்களுக்கு மேலாக படவரைஞராக சேவையாற்றியவராகவும் இருத்தல் வேண்டும் ; அல்லது

(இ) புகழ்பெற்ற பொறியியல்தாபனமொன்றில் அல்லது பட்டயம் பெற்ற பொறியியலாளர்களிடம் அல்லது சிற்பிகளிடம் 5 வருடங்களுக்கு படவரைஞர்களாக சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—சிங்களமொழிமூலம் பயிற்றப்பட்ட சிங்கள பரீட்சார்த்திகளைப் பொறுத்தவரையில் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (1961 ம் ஆண்டு தை மாதம் 10 ந் திகதிக்கு முன்னர் அரசசேவையிலிருந்த உத்தியோகத்தர்களுக்கும் அரச சேவையிலிருந்துகொண்டும் வேறு பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கும் இத்தகைய பொருத்தமுடைத்தாகாது.)

4. **சேவை நிபந்தனைகள்.**—(i) பதவிகள் நிரந்தரமானவையாகும். அரசசேவை சகாய நிதிக்கு உதவுத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் உள்ளக வெளியக கடமைகளையும் ஆற்றுமாறு வேண்டப்படுவார்கள்.

(iii) அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிகள், நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்பட்டவர்களாவார்கள்.

(iv) அவர்கள் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும்பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவதற்குட்படுமாறு வேண்டப்படுவார்கள்.

பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (மு. கு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைக்குரிய பிரமாணத்தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) கல்வி, தொழில்நுட்பத் தகைமைகளுக்குச் சான்றிதழ்கள்,

(இ) நன்லொழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு.

இந்த அரசாங்க வர்த்தமானியின் பகுதி I, தொகுதி (II அ) இன் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

யே. பீ. வீரரத்ன,
கட்டடங்கள் பணிப்பாளருக்காக.

கட்டடங்கள் திணைக்களம்,
கொழும்பு 1.
12.6.1973.

**கட்டடங்கள் திணைக்களம்**

இரண்டாந்தர படவரைஞர் பதவிக்கான விண்ணப்பம்

1. (i) பெயர் (முதலெழுத்துக்களுடன்) :————.
(ii) முழுப்பெயர் :————.
(பெரிய எழுத்தில்)

2. முகவரி :————.

3. (i) பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
(ii) 1973.07.18 ல் வயது :— வருடங்கள் :————. மாதங்கள் :————.

4. (i) சாகியம் :————.
(ii) இலங்கையராயின் பிறப்பாலா அல்லது பதிவாலா :——

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா :————.

6. கல்வி, தொழில்நுட்பத் தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

7. பாடசாலையை விட்டபின்னர் செய்த தொழில்/பயிற்சிகளின் விபரம் :————.

8. முன்பு ஏதாவது அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்திலோ வேலை செய்தவராயின், அத்தொழிலிலிருந்து விலகியதற்கான காரணம் :————

9. தொழில் நுட்பப் பயிற்சிகளின் விபரங்கள், ஏதும் இருந்தால் :————.

10. இணைக்கப்பட்ட நல்லொழுக்கச் சான்றிதழ்கள் பெறப்பட்டவர்களின் பெயரும், தகுதியும் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது தவறானதாக அல்லது பிழையானதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படமுன் காணப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடெதுவுமில்லாப் பதவி நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

7-74—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்**

உதவிக் கணக்காளர் (செலவு) பதவி

இக்கூட்டுத்தாபனத்தில் மேற்காணும் பதவிக்கான விண்ணப்பங்கள் தேவையெனக் கருதப்படும் தகுதிகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து கீழ்க் கையொப்பமிடுபவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. **சம்பள விகிதம்.**—ரூபா 850—10×45—1,300/- (மாதமொன்றிற்கு எல்லாமுட்பட)

2. **வயதெல்லை.**—25 முதல் 40 வரை

3. **கல்வியும் மற்றும் தகமைகளும்.**—இலங்கை சாட்டட் கணக்காளர் நிலையத்தின் இடையான பரீட்சை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றின் பரீட்சை அல்லது செலவு முகாமைக் கணக்காளர் நிலையத்தின் பிரிவுகள் I, II, III இல் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

4. **அனுபவம்.**—மேற்கூறிய பரீட்சையொன்றில் தேர்ச்சி பெற்ற பின்னர் ஆகக்குறைந்தது 3 வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்,

இக்கூட்டுத்தாபனத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப்படிவங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 2பி, டி பொன்சேகா விதி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு 1973, ஜூலை மாதம் 20 அன்று அல்லது அதற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட கடிதவுறைகளில் அனுப்பப்பட வேண்டும். நேரில் வருபவர்கள் விண்ணப்பப்படிவங்களை இக்காரியாலயத்தில் சாதாரண அலுவல் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். மற்றவர்கள் தமது விலாசமிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட (அளவு 9"×4") கடிதவுறைகளை எனக்கனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

தலைவர்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

2பி, டி பொன்சேகா வீதி,
கொழும்பு-5.
27.06.1973.

7-133—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

**பதுளை மாவட்டத்தில், கந்தப்பள்ள மேற்குப் பிரிவிற்கு, பிறப்பு இறப்பும், கப்புத்தளைப் பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி**

கந்தப்பள்ள மேற்கு, பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள், நிரந்தரமாகக் குடி இருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண், இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று, இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் நிலையங்களிலும், கூட்டுறவுச்சங்க அலுவலகங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லாவிண்ணப்பங்களும், இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப்பத்திரத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 7 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எனக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மெரில் ஜெயசூரிய,
பெரும்பகுதிப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
பதுளை,
1973 ம் ஆண்டு ஆனி மீ 25 ந் உ.

7—151—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

**தேசிய நூதனசாலைத் திணைக்களம்**

**விலங்கியல் உதவியாளர் பதவி**

தேசிய நூதனசாலைத் திணைக்களத்தில் விலங்கியல் உதவியாளர் பதவிக்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்து 1973, ஜூலை 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு.—(i) மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாத விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப் பத்திரமோ அது சம்பந்தமான கடிதமோ தபாலில் காணமல் போய்விட்டதாக அல்லது தாமதமானதாகச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனிக்கப்படமாட்டா. கடைசி நாள் வரை விண்ணப்பப் பத்திரத்தை தாமதப்படுத்துவதால் உண்டாகக்கூடிய கேடுகளை விண்ணப்பதாரரே பொறுக்க வேண்டும்.

2. சேவையில் அமர்த்துவதற்கான விதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர், தற்போது, ஓய்வூதியத்துடன் கூடிய பதவி வகிக்காதவராயிருந்தால் அவர்/அவள் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்துக்கு உதவுதொகை வழங்குபவராக இருப்பார். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நியமன தினத்தன்று அரசாங்க சேவையிலோ, உள்ளூராட்சிச் சேவையிலோ, ஓய்வூதியத்துடன் கூடிய பதவியை வகித்து வருபவராயிருந்தால் அவர்/அவள் தொடர்ந்து ஓய்வூதிய உரிமையை அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தற்பொழுது அரசாங்க சேவையைச் சேராதவராயிருந்தால் முதலில் மூன்று வருடங்கள் தகுதிகாண் காலத்தின் பேரில் நியமிக்கப்படுவார். அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில், ஓய்வூதியத்துடன் உள்ள உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் பட்சத்தில் அவர்/அவள் குறிப்பிட்டதொரு கால எல்லைக்குப் பதில் உத்தியோகத்தராகப் பணிபுரிந்த பின்னரே நியமனம் வழங்கப்படும்.

3. வேதனமும் படிகளும்.—இப்பதவிக்கான திரட்டிய வேதன அளவு :—வருடத்துக்கு ரூ. 7,440 முதல் ரூபா 360 ஐக் கொண்ட 10 வருடாந்த ஏற்றங்களையும், ரூ. 480 க் கொண்ட 11 வேதன ஏற்றங்களையும் உள்ளடக்கியதாக வருடமொன்றுக்கு ரூபா 16,320 வரை அதிகரிக்கும். ரூ. 11,040 உம் ரூ. 14,400 வேதன இலக்குக்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு.

குறிப்பு.—(அ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் மேற்குறித்த திரட்டிய வேதன அளவுத்திட்டத்தில் ரூபா 11,520 க் கொண்ட வருடாந்த வேதனத்தைப் பெறுவதற்கு முன்னர் விலங்கியல் துறையில் பி.எச்.டி. அல்லது எம்.எஸ்.ஸி. பட்டம் பெறுதல் வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பி.எச்.டி. அல்லது எம்.எஸ்.ஸி. பட்டம் பெற்றவராயிருந்தால் மேற்குறித்த திரட்டிய வேதன அளவுத் திட்டத்தில் ரூ. 8,520 க் கொண்ட வருடாந்த வேதனத்தில் அமர்த்தப்படுவார்.

4. தகைமை.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றுள்ளார் என்பதற்கு திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) சிறந்த நன்னடத்தையும் நல்ல தேகாரோக்கியமும் உடையவரென்றும்,

(ஆ) 1973.07.30 திகதியன்று 21 வயதுக்குக் குறையாத 35 வயதுக்கு மேற்படாதவரென்றும், (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதன்று),

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விலங்கியல் முதலாந்தர அல்லது இரண்டாந்தர சிறப்புப்பட்டம் அல்லது அதனிலும் உயர்வான பட்டம் பெற்றவர் என்றும்,

(ஈ) உயர் பாடசாலைச் சான்றுப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது வேறு உயர் பரீட்சையொன்றில் சிங்கள மொழியிலோ, சிங்கள இலக்கியத்திலோ சித்தி அடைந்தவரென்று.

5. பின்வரும் சாதனங்களில் ஒன்றையோ அனைத்தையுமோ சமர்ப்பிக்கும்படி கேட்கும்பொழுது விண்ணப்பதாரர் அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் (கவனிக்க.—உதவி பெற்ற பாடசாலைகளுக்கான பிரமாணக் கோவை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) பட்டச் சான்றிதழ் அல்லது உயர்கல்விச் சான்றிதழ்.

(இ) ஒழுக்கச் சான்றிதழ் இரண்டு (இவற்றில் ஒன்று கல்வி அலுவல்கள் பணிப்பாளர் அல்லது கல்லூரி விரிவுரையாளர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.)

(ஈ) உயர் தொழில் உம்/அல்லது தொழினுட்பத் தகைமைகள் தொடர்பான சான்று.

(உ) சிங்கள மொழியில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சைக்கான சான்றிதழ்.

குறிப்பு.—(i) விண்ணப்பப் பத்திரத்துடன் எந்த ஒரு ஆவணமோ ஆவணங்களின் பிரதியோ இணைக்கப்படுதலாகாது.

(ii) ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி கோரும் இடத்து அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள், விண்ணப்பப் பத்திரங்களைத் தமது திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். மேற்குறித்த திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. இருந்தும் திணைக்களத் தலைவர்களுக்குக் குறித்த நேரத்தில் கிடைத்து, தாமதத்துக்கு ஏற்ற காரணம் காட்டப்பட்டால் மட்டும் தாமதமாகிக் கிடைத்த விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

7. விண்ணப்பப்பத்திரங்களையும், அவற்றுடன் தொடர்புடைய வேறு கடிதங்களையும் அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும். அமைச்சைச் சேர்ந்த வேறெந்த உத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்புதலாகாது.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I பிரிவு (IIஅ) இன் தொடக்கத்தில் உள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பில் பொருத்தமான பொது நிபந்தனைகளை கவனித்தல் வேண்டும்.

கலாச்சார அமைச்சின் செயலாளர்.

197
கலாச்சார அமைச்சு,
212, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 7.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

*கவனிக்க.*—8½"×13½" அளவுடைய கடதாசியில் அமைதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விலங்கியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பப்பத்திரம்" என்று எழுதி பதிவுத் தபாலில் கலாச்சார அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

தேசிய நூதனசாலைத் திணைக்களத்தில் விலங்கியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம்

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) திரு./திருமதி/செல்வி : ————.

2. முழுப்பெயர் :————.

3. விலாசம் :————.

4. (அ) இலங்கையரா ? :————.
   (ஆ) அவ்வாறுனுல் வம்சாவழி மூலமா ? பதிவு செய்ததன் மூலமா ? :————.

5. பிறந்த திகதி :—
   வருடம்———— மாதம்———— நாள்————.

6. விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தில் வயது :—
   வருடம்———— மாதம்———— நாள்————.

7. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? :————.

8. கல்வித் தகைமைகளும் தொழினுட்பத் தகைமைகளும் :——

| பரீட்சை | வருடம் | துறை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

9. பள்ளிக்கூடத்திலிருந்து விலகிய பின்னர் செய்த தொழில்கள் அல்லது பயிற்சிகள் பற்றிய விவரம் :————.

10. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரச யாக்கமொன்றில் சேவை செய்திருந்தால் :————. அங்கிருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக : ————.

11. யாதேனுமொரு குற்றத்துக்காக என்றுவது நீதிமன்றமொன்றில் குற்றவாளியாகியிருந்தால் குற்றத்தையும் அதற்குக் கிடைத்த தண்டனையையும் பற்றிய விவரங்களைக் குறிப்பிடுக :————.

12. ஒழுக்கச் சான்றிதழ் வழங்கியுள்ள இருவரது பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

13. நீர் பணக்கஷ்டங்கள் அற்றவரா ? அவ்வாறில்லாவிட்டால் உமது கடன் பொறுப்புக்களின் அளவைக் குறிப்பிடுக : ————.

14. இந்த விண்ணப்பப்பத்திரத்தில் நான் குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கிறேன். இங்கு குறிப்பிட்டுள்ள ஏதேனும் விவரம் பொய்யானது அல்லது பிழையானது என, தெரிவு செய்யப்படுவதற்கு முன் வெளிப்பட்டால் நான் தகுதியற்றவராவேன் என்பதையும், நியமனத்தின் பின்னர் வெளிப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரின் கையொப்பம்.

திகதி :————.

7–58—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

இல. .வெ. மு./4/152.

### கல்வி அமைச்சு

#### பிரான்சு அரசாங்க புலமைப் பரிசில்கள், 1973 ஆம் ஆண்டு

பிரான்சு அரசாங்கத்தால் பின்வரும் துறைகளில் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன :—

(1) பிரெஞ்சு மொழி (முதல் பட்டப் பயிற்சிநெறி)
(2) தொல்பொருளியல் (பட்டப்பின் கற்கைகள்)
(3) பொருளியலும் திட்டமிடலும் (வங்கிப் பயிற்சி) (பட்டப் பின் கற்கைகள்)
(4) மருத்துவத்தில் பட்டப்பின் பயிற்சி.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்த பின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப் பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—புலமைப் பரிசில்களின் கால எல்லை தெரிவு செய்யப்படும் பயிற்சி நெறியைப் பொறுத்ததாகும். பட்டப்பின் புலமைப் பரிசில்கள் பொதுவாக 2 வருடகால அளவினதாகவும் மருத்துவத்திலான பட்டப்பின் பயிற்சி நெறி 6 மாத கால அளவினதாகவும் அமையும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு பிரான்சு அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப் படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) ஸ்ரீ லங்கா பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1973.9.1 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) (அ) "பிரேஞ்சு மொழிப்" பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்களாயின் க. பொ. த. (சா. தா) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்கள/தமிழ்மொழியும் இன்னெரு தற்கால மொழியும் உட்பட 7 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் பரிசிலுள்ள பிரான்சு சம்மேளனத்தால் (Alliance Francaise of Paris) வழங்கப்படும் தகுதித் தேர்வு அல்லது சமமான தகுதித் தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) தொல்பொருளியல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்களாயின் தொல்பொருளியலை ஒரு பாடமாகக் கொண்டு அங்கிகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டம் அல்லது தொல்பொருளியலில் சமமான அல்லது உயர்ந்த தகைமை பெற்றிருக்க வேண்டும்.

(இ) "பொருளியலும் திட்டமிடலும் (வங்கிப் பயிற்சி) பயிற்சி நெறிக்கு" விண்ணப்பிப்பவர்களாயின் வங்கிப் பயிற்சியை விசேட பாடமாகக் கொண்டு பொருளியலில் விசேட பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) "மருத்துவ பட்டப்பின் பயிற்சி நெறிக்கு" விண்ணப்பிப்பவர்களாயின் கலாநிதிப் பட்டம் பெற்ற மருத்துவ விரிவுரையாளர்களாயிருக்க வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது

அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பாடுகளை 1.9.1973 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க் காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) பிரான்சு தேசத்துப் போய்வருவதற்கான பயணச் செலவு.

(ஆ) மாதாந்தச் சகாயப்படியாக 750 பிராங்ஸ் (Francs) (பிரேஞ்சு மொழியிலான பயிற்சி நெறிக்குப் புலமைப் பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 500 பிராங்ஸ்)

(இ) புத்தகங்கள், கற்கைகளுக்கு வேண்டிய ஏனைய சாதனங்கள் ஆகியவை தொடர்பான செலவுகளுக்கான படி.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எந்தச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், பிரான்சுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக ஸ்ரீ லங்கா குடியரசுக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப் படிகள் ஆதியன உட்பட) ஸ்ரீ லங்கா குடியரசுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பிரான்சில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதாவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டிய விண்ணப்பங்கள் 1973.7.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு
மலாய் வீதி, கொழும்பு 2,
1973.06.26.

7-110—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

**கல்வி அமைச்சு**

கல்வி அமைச்சின் கீழுள்ள அரசினர் சங்கீதக் கல்லூரி அதிபர் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள அரசினர் சங்கீதக் கல்லூரி அதிபர் பதவிக்கு கீழே விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைத் திருப்தி செய்யும் (ஆண்/பெண்) இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் [illegible] றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண் [illegible] யாரிக்கப்பட்டு கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள [illegible] ன் செயலாளருக்கு (பாடசாலை நிர்வாகக் கிளைக்கு) [illegible] ண்டு ஜூலை மாதம் 21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " அரசினர் சங்கீதக் கல்லூரி அதிபர் பதவி " என அடையாளமிடப்படவேண்டும்.

2. இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ. 11,040—480/11—16,320.

(1.10.69 க்கு முன்னரான ஒத்த வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் ரூ. 8,400—480/10—13,200/- ஆகும்) விதிக்கப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் விலாகப்படி வழங்கப்படும்.

3. **வயதுக் கட்டுப்பாடு.**—விண்ணப்பதாரிகள்—1973 அன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக்கு கட்டுப்பாட்டின் மேலெல்லே அமையாது.

4. விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(i) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) (அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்கள/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் ; **அல்லது**

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் யில்; அல்லது

(இ) சமனான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் அல்லது நிலையத்தால் கீழைத்தேய சங்கீதத்தில் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(iv) அரசாங்க நிலையம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஒன்றில் கீழைத்தேய சங்கீதத்தை 10 வருடத்துக்கு மேற்பட்ட காலம் கற்பித்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(v) அரசினர் சங்கீதக் கல்லூரி ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சங்கீதக் கல்லூரி ஒன்றில் நிர்வாக அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(vi) கீழைத்தேய சங்கீதத்தில்—வாய்மூல, வாத்திய சங்கீதத்தில்—பரந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(vii) உள்நாட்டு சங்கீதத்திலும்—வாய்மூல, வாத்தியமூல சங்கீதத்தில்—கிராமியப் பாடல்களிலும் சிறந்த ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

(viii) சங்கீத அமைப்பில் ஆற்றலும் கோஷ்டிகானம், வாத்திய இசை தயாரித்தலில் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

(ix) கீழைத்தேய சங்கிதத்தில் ஆராய்ச்சி வேலை செய்வதில் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

(x) கீழைத்தேய சங்கீதமும் இலங்கை வரலாறும்பற்றிய பரந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(xi) வெவ்வேறு சங்கீத முறைகள் பற்றியும் நடைகள் பற்றியும் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

மு. கு.—(அ) வெளிநாட்டிலுள்ள யாதேனும் சங்கீதக் கல்லூரியில் பெற்றுள்ள பயிற்சி மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஆ) கீழைத்தேய மொழிகளிலான அறிவும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

5. **நியமன நியதிகள்.**—(i) நியமனம் சாதாரணமாக மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவியை ஏற்கனவே வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

(ii) அரசாங்க கரும மொழிக் கொள்கையைக் காரியப்படுத்துதற்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற் பொருட்டு ஆக்கப்பட்டுள்ள அல்லது ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கமைய ஒழுக வேண்டும்.

6. அரசினர் சேவையிலுள்ள தகுதியுடைய உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் ஏற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், விதிக்கப்பட்ட திகதிக்குமுன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டு உரிய காரணங்காட்டி அதனை ஏற்றுக்கொள்ளுமாறு அவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரமேனும் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்ட விதிகளின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பத்திரமேனும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் உயர்தொழிற் தராதரப் பத்திரமும்.

(இ) விண்ணப்பதாரியின் ஒழுக்கம் பற்றிய சமீபகால மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள்.

குறிப்பு.—ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள அபேட்சகர்கள் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை.

8. விண்ணப்பங்களும் அவை பற்றிய ஏனைய கடிதங்களும் இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் அனுப்பப்படலாகா.

9. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியில் I ஆம் பகுதி (IIஅ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகிறது.

பி. உடகம,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1973.6.27.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

அரசினர் சங்கீதக் கல்லூரி அதிபர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் :————.
(தெளிவாக எழுதவும்)

2. தபால் விலாசம் :————.

3. சாதியம் :————.
(அ) வம்சாவழியாகவா :————.
(ஆ) பதிவு காரணமாகவா இலங்கையர் :————.
(பதிவு காரணமாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் திகதியையும் தொடர்பிலக்கத்தையும் குறிப்பிடவும்.)

4. (அ) பிறந்த திகதி : வரு.———, மா.———, நா.———.
(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளபடி சரியான வயது : வரு.———, மா.———, நா.———.

5. பின்வருவோர் பிறந்த இடம்—
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிபாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

6. குணநலச்சான்றிதழ்கள் கொடுத்தவர்களின் பெயர்களும் விலாசமும் :————.

7. கல்வித்தகைமைகளும் (திகதியுடன்) கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் :—
(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.
(இ) ஆங்கிலம் :————.

8. சிங்கள மொழிமூலம் கற்பிக்கவும் பதிவுச் சுவடிகளை வைத்திருக்கவும் முடியுமா :————.

9. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் பற்றிய விபரங்கள் :————.

| திணைக்களம்/நிலையம் | வகிக்கும் பதவி | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |

10. உயர்தொழில் தராதரப் பத்திரங்கள் பற்றிய விபரங்கள் (திகதிகளுடனும் நிலையங்களின் பெயர்களுடனும்) :————.

11. இப்பதவிக்குத் தொடர்புடைய விசேட தகைமைகள், யாதேனும் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இவ்விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்களில் யாதேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

7–155—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

## கல்வி அமைச்சு

### அரசினர் பாடசாலைகளில் விஞ்ஞானம்/கணிதம் கற்பிப்பதற்காக மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் விஞ்ஞான பட்டதாரி உதவி ஆசிரியர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

அரசினர் பாடசாலைகளில் விஞ்ஞான/கணித உதவி ஆசிரியர் பதவிகளுக்காக ஸ்ரீ லங்கா குடியரசுப் பல்கலைக் கழகங்களில் விஞ்ஞானப் பட்டதாரித் தராதரம் அல்லது அதற்குச் சமமான தகைமை பெற்ற ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் கீழ்க் காணப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்துக்கு அமைய விண்ணப்பங்களைத் தயாரித்து, 1973 ஆகஸ்ட் மாதம் 6 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 2, மலே வீதி, கல்வி அமைச்சு, பாடசாலை நிருவாகக் கிளையின் கல்வி அதிபருக்குக் கிடைக்கக் கூடியதாகப் "பதிவஞ்சலில்" அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விஞ்ஞானப் பட்டதாரி உதவி ஆசிரியர் பதவிகள்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். இப்பொழுது அரச சேவையில் இருக்கின்ற ஸ்ரீ லங்கா குடியரசுப் பல்கலைக் கழகங்களில் விஞ்ஞானப் பட்டதாரித் தராதரப் பத்திரம் பெற்றவர்களும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

2. கடமை புரிவதற்கான நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :—

(அ) (i) இப்பதவி நிரந்தரமானது. இளைப்பாற்றுச் சம்பள உரித்து அற்றது;

(ii) நியமிக்கப்படும் நியமதாரிகள் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்;

(iii) பரீட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும்.

(iv) அரச கரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கும் விசேடமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் சட்டதிட்டங்களை அமுல் நடத்துவதற்காகவும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இதன் பின்னர் ஏற்படுத்தப்படவுள்ள நிபந்தனைகளுக்கு அமையவும் நியமதாரி ஒழுகுதல் வேண்டும்.

(v) இந்த நியமனம் அரசாங்க சேவைக் கமிசன் சபையின் சட்டதிட்டங்களுக்கும் நிதிச் சட்டம், நிருவாக ஒழுங்கு முறைச் சட்டம், திணைக்கள நியதியெனும் கட்டளைகள் என்பனவற்றோடு அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சட்டங்கள், கட்டளைகள் ஆகியவைகளுக்கும் உட்பட்டதாகும்.

(ஆ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தாம் நியமனம் பெறும் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுள் தம்மை நியமிக்கப்பெறும் பாடசாலையில் சேவை செய்ய வேண்டுவதோடு, எக்காரணம் கொண்டாயினும் அம் மாவட்டத்துக்கு வெளியே மாற்றம் கோருவதற்கு உரிமை கிடையாது. எனினும், ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ அல்லது திணைக்களத் தேவையைப் பொறுத்தோ ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்குத் திணைக்களத்திற்கு இருக்கும் உரிமை இதனுல் பாதிக்கப் படமாட்டாது.

3. இப்பதவிகளுக்காக விதிக்கப்பட்டுள்ள திரட்டிய சம்பள விகிதம் பின்வருமாறு :—

(i) சாதாரண பட்டதாரிகளுக்கு—

ரூபா 5,160—10/144—8/180—1/240—8,280/—வருடாந்தம். (தகுதிகாண் தடை ரூ 7,860/க்கு முன்னர்—கல்வி பயிற்சிநெறி டிப்ளோமா)

(ii) சிறப்புப் பட்டதாரிகளுக்கு—
ரூபா 5,736—6/144—8/180—3/240—8,760 வருடாந்தம் (தகுதிகாண் தடை ரூபா 8,520/—க்கு முன்னர்—கல்வி பயிற்சிநெறி டிப்ளோமா)

விவாகப்படி குறித்த திட்டத்துக்கு அமைய வழங்கப்படும்.

4. தேவையான தகைமைகள் :—சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்தவராகத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருப்பதாக;

(ஆ) 6.8.1973 ஆந் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருப்பவரென (இப்போது அரச சேவையிலிருப்பவர்களுக்கு இவ்வயதெல்லை செல்லுபடியாகாது) ;

(இ) கீழ்க்காணப்படும் தகைமைகளோ அல்லது அதற்குக்கூடிய கல்வித் தகைமைகளோ பெற்றிருப்பவராக :—

(i) ஸ்ரீலங்கா குடியரசுப் பல்கலைக் கழகமொன்றில், தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களில் மூன்று பாடங்களில் சித்தியடைந்துள்ள விஞ்ஞானப் பட்டதாரியொருவராக இருத்தல்; அல்லது

(ii) ஸ்ரீலங்கா குடியரசுப் பல்கலைக்கழகமொன்றில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களொன்றில் சித்தியடைந்துள்ள சிறப்பு விஞ்ஞானப் பட்டதாரியொருவராக இருத்தல் ; அத்துடன்

(iii) சிரேஷ்ட தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணதரப்) பத்திரப் பரீட்சையில் சிங்கள/தமிழ்ப் பாஷைப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

(ஈ) தமது பதிவைக் காட்டியிருக்கும் தேர்தல் தொகுதியில் தாம் நிரந்தர வதிவாளர் என்பதைக் கீழ்க்காணப்படும் ஏதாவது ஒரு முறையில் நிரூபித்தற்கு விண்ணப்பதாரி தயாராய் இருத்தல் வேண்டும்.

(i) குறித்த தேர்தல் தொகுதியில் பிறந்தவர் என்பதைக் நிரூபிக்கத் தமது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தைக் காட்டுவதன் மூலம்,

(ii) தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் இருந்து சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்/கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளார் என்பது (சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தை அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம்.)

(iii) குறித்த தேர்தல் தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் என்பது (வாக்காளர் அட்டவணையின் உறுதிப்படுத்தப்பட்ட பகுதிப் பிரதியைச் சமர்ப்பிப்பதன் மூலம்)

(iv) விண்ணப்பதாரியும் அவரின் பெற்றோர்களும் குறித்த தேர்தல் தொகுதியில் நிரந்தர வதிவாளர்களாக இருக்கிறார்கள் என்பதை ருசுப்படுத்த குடியிருப்பாளர் அட்டவணையைக் காட்டுவதன் மூலம்

(உ) விண்ணப்பதாரிகள் கீழ்க் குறிப்பிடப்படும் சாதனங்களின் நகல் பிரதிகளை (மூலப் பிரதிகளையன்று) தத்தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ii) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(iii) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரு நற் சாட்சிப் பத்திரங்கள்

குறிப்பு.—மேற்குறித்த சாதனங்களின் பிரதிகளை (நகல்) இணைத்த னுப்பத்தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

5. விண்ணப்பங்களும் அவை தொடர்பான ஏனைய சாதனங்களும் இவ்வறிவித்தலின் முதலாம் பந்திக்கு அமைய அனுப்பப்படுவதோடு இவ்வமைச்சின் அல்லது திணைக்களங்களின் எந்த ஒரு உத்தியோகத்தரின் பெயருக்காயினும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகாது.

6. இவ்வர்த்தமானி முதலாம் பகுதி இரண்டாம் பகுதியின் ஆரம்பத்தில் காணப்படும் அரசினர் சேவைகளுக்கான நியமனங் களுக்கு அமையும் பொது நிபந்தனைகள் கவனிக்கற்பாலன.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

8. அஞ்சலில் ஏற்படக்கூடிய எத்தகைய தாமதத்தையும் தவிர்க்கு முகமாக விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவஞ்சல் மூலம் அனுப்புமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பி. உடகம,
கல்வி அமைச்சின் செயலாளரும்
கல்வி மா அதிபரும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
26.6.1973.

(மாதிரி விண்ணப்பம்)

மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் அரசினர் பாடசாலைகளில் விஞ்ஞானப் பட்டதாரிகள் உதவி ஆசிரியர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

1. குடும்பப் பெயர் முதலில் வரக்கூடியதாக முழுப்பெயர் (தெளிவான எழுத்தில்) :————.

2. (i) நிரந்தர விலாசம் :————.
(ii) தேர்தல் தொகுதி :————.

3. வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டிருப்பின் குறித்த தேர்தல் தொகுதி :————.

4. ஆணு/பெண்ணு :————.

5. விண்ணப்பதாரி க.பொ.த. (சா.த.) பரீட்சைக்குத் தோற்றிய (இறுதியாகப் படித்த) பாடசாலை :————

6. விவாகஞ் செய்தவரா/செய்யாதவரா :————.

7. பிறந்த திகதியும் இடமும் :————.

8. 6.8.73 ஆந் திகதியன்று வயது :————.

9. (i) விண்ணப்பதாரியின் தகப்பன் பிறந்த இடம் :————
(ii) விண்ணப்பதாரியின் தாய் பிறந்த இடம் :————.

10. சாதியம் :————.

11. இலங்கையராயின் வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா ? :————.

12. தகைமைகள் :—
(அ) பட்டம் சம்பந்தமான விபரம் :————. (சிறப்பு அல்லது சாதாரணம்)
(ஆ) வகுப்பு :————.
(இ) பல்கலைக் கழகம் :————.
(ஈ) பட்டம் பெற்ற வருடம் :————.
(உ) பட்டப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் :————.
(ஊ) இடைமானி/விஞ்ஞானத் தகுதி நிலைப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் :————.
(எ) மொழி மூலம் :————.

13. சிங்கள/தமிழ் மொழியில் பெற்றுள்ள உயர்ந்த தகைமைகள் :————.

14. விண்ணப்பதாரி அரசாங்க சேவகராக இருந்திருப்பின்/இருப்பின் அது சம்பந்தமான விபரங்களைத் தருக.
(i) திணைக்களத்தின் பெயர் :————.
(ii) வகித்த/வகிக்கின்ற பதவியும் அப்பதவி, நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்துடனுனதுமா என்பது பற்றிய விபரம் :————.
(iii) நியமனம் பெற்ற திகதி :————.
(iv) விலகிய திகதியும், விலகியதற்கான காரணமும் :————.
(v) ஆசிரியராயின் பதிவிலக்கமும் கடமையாற்றிய/கடமையாற்றுகின்ற பாடசாலையும் :————.
(2) தற்பொழுது பெறும் சம்பளமும், சம்பள விகிதமும் :————.
(3) முதல் நியமனத் திகதி :————.
(4) கற்பிக்கும் வகுப்பும் பாடங்களும் :————.

15. விசேட உரிமைகள், தகைமைகள், அல்லது அனுபவங்கள் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் :————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமெனத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படவில்லையென்றும், பதவி துறந்தவரெனக் கருதப்படவில்லையென்றும் யான் வம்சாவழி காரணமாக/பதிவு காரணமாக இலங்கைப் பிரசையென்றும் தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கு அடங்கியுள்ள விபரங்கள் ஏதாவது பொய்யானவை அல்லது பிழையானவையென நான் தெரிவு செய்யப்படுதற்கு முன்னர் தெரியவரின் நியமனம் பெறத் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவியிலிருந்து நீக்கப்படுதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்,

திகதி :————.

(விண்ணப்பதாரி அரசாங்க திணைக்களம் ஒன்றில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் கடமை புரிபவராக இருப்பின், குறித்த திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும்.)

................................யின் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் ஒரு ஆசிரியராகத் தெரிவு செய்யப்படுவராயின் இங்கு புரியும் சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்.

திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவர்
அல்லது அவர்கட்குப் பதிலாக.

பதவி :————.

விலாசம் :————.

திகதி :————.

7-140—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

**இலங்கைக் கடற்படையில் அலுவலர்க்கான வெற்றிடங்கள்**

இலங்கைக் கடற்படையின் நிரந்தரப் படையின் நிறைவேற்றுக் கிளையில் அலுவலர்க்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்கு இலங்கைக் கடற்படையின் நிரந்தரப்படையில் உதவி—துணை நிலைஅலுவலர் பதவி நிலைக்கு நிரந்தர அரசாணையமர்வுகள் அளிக்கப்படும்.

3. தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் இலங்கையில்/வெளிநாட்டில் பயிற்சி பெறும்படி வேண்டப்படுவார்கள்.

4. தகவுத்திறன்.—அபேட்சகர்கள்—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விவாகமாகாமலும் 1973 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 6 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாமலும் 24 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(இ) (i) பின்வரும் பாடங்களில் 2 திறமைச்சித்திகளுடன் க. பொ. த (உயர்தர)ப் பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

தூயகணிதம்
பிரயோக கணிதம்
பௌதிகவியல்
இரசாயனவியல்
தாவரவியல்
விலங்கியல்

அல்லது,

(ii) மேலேயுள்ள பாடங்களில் மிகவுயர்ந்த கல்விச் சான்றிதழை உடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—1. விளையாட்டுத்துறைகளில் திறமையுடைய அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2. மேலேயுள்ள 4 (அ) விலும் (ஆ) விலும் கேட்கப்பட்டவற்றை உடைய தொண்டர் கடற்படை அலுவலர்கள், வேண்டப்பட்டுள்ள பொருத்தமான கல்வித்தகைமைகளை அல்லது அத்தகைய வேறு தகைமைகளை உடையவர்களாக இருப்பின் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3. வைத்திய தராதரம்—அபேட்சகர்கள் கடற்படையினுல் வேண்டப்பட்டவாறு வைத்திய தராதரத்திற்கு இணங்குவதுடன் நியமனத்திற்கு முன்னர் கடற்படை ஒழுங்கின் கீழ் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் சித்தி பெறவும் வேண்டும்.

5. **சம்பளமும் படிகளும்.**—தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்குக் கடற்படைச் சம்பளக் கோவையில் விதிக்கப்பட்டவாறு அவர்களுடைய பதவி நிலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சம்பளமும் படிகளும் நியமன காலத்தின்போது வழங்கப்படும்.

(அ) படைச் சேவைச் சம்பளக் குழுவினல் அங்கீகரிக்கப்பட்ட திரட்டிய சம்பளவிகிதப்படி. அலுவலர் தொடக்கம் ஏவுனர் பதவிநிலை வரையுள்ளவர்க்குப் பின்வருமாறு சம்பளம் வழங்கப்படுகின்றன :—

உதவி- துணை நிலை அலுவலர்.. வருடத்திற்கு ரூபா 7,500 இல் இருந்து வருடத்திற்கு ரூபா 180 ஆக 5

| | |
|---|---|
| | வருடாந்த ஏற்றத்துடன் வருடத்திற்கு ரூபா 8,400 வரை. |
| துணை நிலை அலுவலர் .. | .. வருடத்திற்கு ரூபா 9,240 இல் இருந்து வருடத்திற்கு ரூபா 180 ஆக 8 வருடாந்த ஏற்றத்துடன் வருடத்திற்கு ரூபா 10,680 வரை |
| துணை நிலை ஏவுநர் .. | .. வருடத்திற்கு ரூபா 11,400 இல் இருந்து வருடத்திற்கு ரூபா 240 ஆக 8 வருடாந்த ஏற்றத்துடன் வருடத்திற்கு ரூபா 13,320 வரை |
| ஏவுநர் .. | .. வருடத்திற்கு ரூபா 15,000 இல் இருந்து வருடத்திற்கு ரூபா 360 ஆக 7 வருடாந்த ஏற்றத்துடன் வருடத்திற்கு ரூபா 17,520 வரை. |

(ஆ) பின்வரும் படிகளும் வழங்கப்படும் :—

(i) கடற்படைச் சம்பளக் கோவையில் ஏற்படுத்தப்பட்டவாறு தகைமைப் படி வழங்கப்படும்.

(ii) கோலவுடைப் படிகள் பின்வருமாறு வழங்கப்படும் :— அயனமண்டலக் கோலவுடைகளுக்கென ரூபா 1,000 கொண்ட தொடக்க நன்கொடை ஒன்று, அத்துடன் மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 25 வீதம் கோலவுடை பேணற்படி ஒன்று.

(இ) பிறபடிகள்—விவாகமானபோது, அரசாங்க விதிப்படி விவாகப் படி வழங்கப்படும். கடற்படைச் சம்பளக்கோவையில் விதிக்கப்பட்டவாறு பிரிவுப்படியும் அதிகாரி வேலையாட் படியும் வழங்கப்படும்.

**6. சேவை நிபந்தனைகள்.**—(அ) காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1950 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் திகதிய 10,187 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அலுவலர்க்கான ஒழுங்குவிதிகளினால் சேவை நிபந்தனைகள் கையாளப்படும்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் சகாய நிதிச் சலுகைகளுக்குத் தகுதியுடையவர்களாக இருப்பதுடன் தங்களுடைய சம்பளத்தில் அரசாங்கத்தால் வேண்டப்பட்டவாறு ஒரு வீதத்தினை அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு அளிக்கும்படி வேண்டப்படுவார்கள். இளைப்பாற்றுச் சம்பளம்/பணிக்கொடை வழங்கப்படமாட்டாது. எனினும், தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகரின் விடயத்தில் அவர் இலங்கைக் கடற்படையில் நியமிக்கப்படும் திகதிக்கு முன்னர் இலங்கைக் குடியரசின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவி ஒன்றினை வகித்திருந்தால் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1962 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் திகதிய 13,423 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1962 ஆம் ஆண்டின் கடற்படை இளைப்பாற்றுச் சம்பளங்களும் பணிக்கொடைகளுக்குமான கோவை நியதிகளுக்கிணங்க இளைப்பாற்றுச் சம்பள உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பர்.

(இ) இலங்கைக் கடற்படை அலுவலர்கள் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்நேரத்திலும் உலகின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவார்கள்.

(ஈ) புதிதாகச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள எவ்வொழுங்கு விதிக்கும் இனிமேல் ஆக்கப்படும் எவ்வொழுங்கு விதிக்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கும் இணங்கும்படி வேண்டப்படுவார்கள்.

**7. விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்துரைகள்.**—கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பங்கள் எழுத்தில் தயாரிக்கப்படுவதுடன் கடற்படைத் தளபதி, கடற்படைத் தலைமை அலுவலகம், த. பெ. இல. 593, கொழும்பு 1 என்னும் முகவரிக்கு 1973 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 6 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

8. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் உள்ள அலுவலர்களின் விண்ணப்பங்கள் திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவருக்கு ஊடாக அனுப்பப்படுவதுடன் அவ்வலுவலர் தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்னும் கடிதம் ஒன்றையும் இணைக்க வேண்டும்.

9. விண்ணப்பங்கள் பின்வரும் பிரதிகளுடன் இணைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் ;

(ஆ) பெறப்பட்டுள்ள கல்வி, தொழில்பற்றிய தகைமைச் சான்றிதழ்கள் அத்துடன் ;

(இ) விண்ணப்பதாரரைத் தனிப்பட்ட முறையில் நன்கு அறிமுகமான பொறுப்புவாய்ந்த ஆட்களிடமிருந்து பெறப்பட்ட ஆகக் குறைந்தது இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள்.

10. பொருத்தமான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு முதற் தெரிவு ஒன்று நடாத்தப்படும். முதல் நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் கடற்படைச் சேவைக்குத் தகுதியா என்பதைப் பரிசோதிப்பதற்காக விசேட உளச்சார்புச் சோதனை ஒன்றுக்குச் செல்லும்படி வேண்டப்படுவார்கள். அதன் பின்னர் நேர்முகப்பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்குப் பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் தெரிவுச் சபையினால் இறுதித் தெரிவு நடாத்தப்படும். நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களுக்கு அத்தகைய நேர்முகப்பரீட்சைக்குரிய இடம், திகதி, நேரம் என்பன எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பிரயாணச் செலவுகளோ அல்லது பிற செலவுகளோ இலங்கைக் குடியரசினால் வழங்கப்படமாட்டா.

ட. பி. குணசேகரா,
கொமொடோர்,
கடற்படைத் தளபதி.

இலங்கைக் கடற்படைத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு யூன் மீ 27 ந் உ.

இலங்கைக் கடற்படை அலுவலர் வெற்றிடங்களுக்கான
விண்ணப்பம்

1. முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) : ————.

2. நாட்டினம் :—(பிறப்பினாலா அல்லது பதிவினாலா இலங்கைப்பிரசை என்பதைக் குறிப்பிடுக. பதிவினாலாயின் சான்றுப்பத்திரத்தின் தொடர் இலக்கமும் திகதியும் தருக.) :————.

3. முகவரி : ————.

4. பிறந்த திகதி : ————. 1973 இல் வயது : ——— ......வருடங்கள்......மாதங்கள்......நாட்கள்

5. தேர்தற்றொகுதி : ————.

6. கிட்டிய பொலிஸ் நிலையம் : ————.

7. பெயர், பிறந்த இடம், தற்போதைய முகவரி : ————.

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

8. நீர் விவாகமானவரா அல்லது தனியாளா ? : ————.

9. நீர் பாடசாலையில் பெற்ற விளையாட்டுத்திறமைகள் என்ன ? : ———.

10. பாடசாலையில் உமது திறமையைக் குறிப்பிடத்தக்க பிற அருஞ் செயல்கள் என்ன ? : ————.

11. படைக்கலந்தாங்கிய படைகளில் அல்லது தொண்டர் படைச் சேவையில் அல்லது பயிலுநர் சிறப்பணியில் அல்லது சாரண இயக்கத்தில் முன்னைய சேவை அனுபவம் உமக்கு ஏதும் உண்டா ? : ————.

12. இப்பதவி நியமனத்திற்கு வேறு விசேட தகைமைகள் உமக்கு ஏதும் உண்டா ? : ————.

13. படைக்கலந்தாங்கிய சேவைகள் எதற்காவது முன்னர் நீர் விண்ணப்பித்தது உண்டா ? அப்படியாயின் பெறுபேறுகள் என்ன ? : ————.

14. உமது பாடசாலை நிலைபற்றிப் பின்வரும் விபரங்களைத் தருக : ———

| பாடசாலையின் பெயர் | திகதி | | சித்தியெய்திய பகிரங்கப் பரீட்சைகளும் பாடங்களும் |
|---|---|---|---|
| | சேர்ந்த | விலகிய | |
| | | | |

15. பாடசாலையை விட்டு விலகிய திகதியிலிருந்து நீர் ஆற்றிய தொழில் பற்றிப் பின்வரும் விபரங்களைத்தருத : ————.

| வேலை கொள்பவர் பெயர் | வேலையின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

16. நற்சான்றுப்பத்திரங்களைப் பெற்றுள்ள ஆட்களின் பெயர்களும் முகவரிகளும் : ————.

(அ) ..........................................................

(ஆ) ..........................................................

மேலே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் சரியானவை என்று என் சத்தியத்தின் பேரில் நான் உறுதியளிக்கிறேன். இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளபடி இலங்கைக் கடற்படையில் அலுவலர் வெற்றிடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்குப் பொருந்தக் கூடிய நடைமுறையையும் விதிகளையும் ; விசேடமாக அலுவலர்களின் சம்பளத்திற்கும் சேவைக்குமான நிபந்தனைகளையும் சலுகைகளையும் நான் நன்கு படித்துப்புரிந்துகொண்டேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

7–108—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கணக்காளர் சேவையின் வகுப்பு IV இற்கு ஆட்சேர்ப்பதற்காய யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சை—1973**

1973 யூன் 8 ஆந் தேதிய 63 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I தொகுதி (IIஅ) யில் வெளியிடப்பட்ட மேற்கூறிய பரீட்சை சம்பந்தமான அறிவித்தலைக் கவனிக்குமாறு பரீட்சார்த்திகளை வேண்டப்படுகின்றது.

பின்வரும் திருத்தங்கள் அவ்வர்த்தமானி அறிவித்தலில் சேர்க்கப்படும்.

2. 1973 ஓகஸ்ட் 20 ஆம் 21 ஆம் 22 ஆம் தேதிகளில் எழுத்துப் பரீட்சை கொழும்பில் நடைபெறும்.

3. பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் முறை

(அ) பரீட்சை ஆணையாளரினால், அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா. 8½"×12" அளவுடைய ஒரு முழுத்தாளின் இருபக்கங்களிலும், அறிவித்தலின் முடிவில் கொடுக்கப்பட்ட, மாதிரிப் படிவம் போன்று விண்ணப்பப் படிவங்கள் தயார் செய்யப்படல் வேண்டும்.

(ஆ) இப்பரீட்சைக்குரிய கட்டணம் 200 ரூபாவாகும். வருமானத் தலைப்பு 6, உபதலைப்பு 2, இனம் 5 என்பனவற்றிற்கு வரவு வைக்கப்படல் வேண்டுமெனும் குறிப்புடன் அணித்தான கச்சேரியில் அல்லது கொழும்பில் உள்ள பொது திறைசேரியில் இக்கட்டணம் விண்ணப்ப முடிவுத் தேதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் கச்சேரியின் அல்லது திறைசேரியின் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) இப்பரீட்சைக்குச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணம் பற்றியும் முற்றுகவோ ஒரு பகுதியாகவோ மீளக் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை நிரப்பி அவற்றைப் பதிவு அஞ்சலில் கொழும்பு 2, தபாற் பெட்டி 1503, பரீட்சை ஆணையாளர் என்னும் முகவரியை 1973 யூலை 21 ஆந் தேதிக்கு முன்னர் சென்றடையுமாறு அனுப்புதல் வேண்டும். இத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் தள்ளப்படும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் மேற்பக்க மூலையில் பரீட்சையின் பெயர் அதாவது, "கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சை" என்பது தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(ஈ) பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை ஒப்புக்கொள்ளப்படும். விண்ணப்ப முடிவுத் தேதியிலிருந்து 3 கிழமைக்குள் ஒப்புக்கோடலைப் பெறுவிடின் உடனடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இதுபற்றிய விசாரணைகள் செய்யத்தவறின் பரீட்சார்த்தி பரீட்சை எடுக்கும் உரிமையை இழக்க நேரிடும்.

6. தகைமை நிபந்தனைகள்

(ஆ) விண்ணப்பதாரி 1973 யூலை 21 ஆந் தேதி 30 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும். ஏற்கெனவே அரச சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.

1973 யூன் 8 இன், 63 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இப்பரீட்சை சம்பந்தமான அறிவித்தலில் கூறப்பட்ட ஏனைய நிபந்தனைகளும் விடயங்களும் மாற்றமின்றி தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

பி. எச். சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிருவாக உள்ளூராட்சி உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
சொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7, 1973, யூன் 27 ந் தேதி.

இலங்கைப் பரீட்சைப் பகுதி

**கணக்காளர் சேவையில் IV ஆம் வகுப்பு நியமனத்துக்கான யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சை—1973**

சுட்டிலக்கம் :————.

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. (i) சொந்தப் பெயர் முதல் எழுத்துக்களுடன் :————.
(ii) முதல் எழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :————.

2. பூரண முகவரி :————.
(அரசாங்க சேவையிலிருப்பவர்கள் தங்கள் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும்)

3. பால் :————.

4. (i) பிறந்த தேதி :————.
(ii) இடம் :————.
(iii) 1973 யூலை 21 ல் வயது : வருடங்கள்————, மாதங்கள்————, நாட்கள்————.

5. நீர் பிறப்பினால் இலங்கைப் பிரசையா, அல்லது பதிவு செய்யப்பட்டவரா :————.

6. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :————.

7. பந்தி (6) (ஈ) இன் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகவு பெறுவதற்காகப் பெறப்பட்ட தகைமைகளையும், அத்தகைய தகைமைகள் எந்நிறுவகத்திலிருந்து பெறப்பட்டவென்பதையும் சித்தியெய்திய இறுதிப் பரீட்சையை அல்லது அதன் பகுதிகளையும் கூறுக :————.

8. பரீட்சார்த்தியின் நல்லொழுக்கத்தையும் திறமையையும் பற்றிச் சான்றுபகரக் கூடியவர்களெனப் பரீட்சார்த்தி தெரிவிக்கும் இரண்டு மத்தியஸ்தர்களின் பெயர்களும் முகவரிகளும் :————.

1.

2.

9.

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை பாதுகாப்பான முறையில் ஒருபக்கத்தில் மட்டும் பசையிட்டு ஒட்டவும்.

10. (i) பரீட்சார்த்தியின் உறுதியுரை

இப்பத்திரத்திற் கொடுக்கப்பட்ட தகவல்கள் யாவும் என் அறிவிற்கு எட்டியவரை உண்மையானவையெனவும் பரீட்சைக் கட்டணத்துக்காகச் செலுத்திய............திகதியிட்ட...............இலக்கப் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இப்பரீட்சையின் பிரமாணங்களுக்கு இயைய ஒழுகுவதற்கும் இப்பரீட்சைப் பிரமாணங்களின்படி நான் தகுதியற்றவ

ரென பரீட்சைக்கு முன்னர் பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தகைமையை நிராகரிப்பதற்கான எத்தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன்.

————,

பரீட்சார்த்தியின் கையொப்பம்.

தேதி :————.

(ii) பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (வர்த்தமானிப் பிரசுரத்தின் பந்தி 3 இ ஐப் பார்க்கவும்).

இவ்விண்ணப்பத்தினை அனுப்பும் பரீட்சார்த்தியாகிய ———— என்பவரை எனக்கு நேர்முகமாக தெரியுமெனவும் அவர் 1973 வருடம் ———— மாதம் ———— தேதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

தேதி :————.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :————.

முகவரி :————.

பதவி :————.

7-154—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

---

**கணக்காளர் சேவையின் IV ஆம் வகுப்புக்கு நியமிக்கப்படுவதற்காய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை—1973**

1973 யூன் 8 ஆந் தேதிய 63 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I தொகுதி (II அ) யில் வெளியிடப்பட்ட மேற்கூறிய பரீட்சை சம்பந்தமான அறிவித்தலைக் கவனிக்குமாறு பரீட்சார்த்திகளை வேண்டப்படுகின்றது.

பின்வரும் திருத்தங்கள் அவ்வர்த்தமானி அறிவித்தலிற் சேர்க்கப்படும் :—

**2. பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் முறை**

(அ) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்படமாட்டா. 8½"×12" அளவுடைய ஒரு முழுத்தாளின் இரு பக்கங்களிலும் அறிவித்தலின் முடிவில் கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவம் போன்ற விண்ணப்பப் படிவங்களைத் தயார் செய்யுமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர்.

(ஆ) இப்பரீட்சைக்குரிய கட்டணம் 100/- ரூபாவாகும். வருமானத் தலைப்பு 6, உபதலைப்பு 2, இனம் 5 என்பனவற்றிற்கு வரவு வைக்கப்படல் வேண்டுமெனும் குறிப்புடன் அணித்தான கச்சேரியில் அல்லது கொழும்பில் உள்ள பொது திறைசேரியில் இக்கட்டணம் விண்ணப்ப முடிவுத் தேதிக்கு முன்னர் செலுத்தப்படல்வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் கச்சேரியில் அல்லது திறைசேரியின் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் கொழும்பு 2, தபாற் பெட்டி 1503, பரீட்சை ஆணையாளர் என்னும் முகவரியை 1973 யூலை 21 ஆந் தேதிக்கு முன்னர் சென்றடையுமாறு அனுப்புதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் தள்ளப்படும். விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்க்கூடாக அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கோ அவரின் திணைக்கள உத்தியோகத்தர் எவருக்குமோ தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்கள் அனுப்பப்படலாகாது. விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் மேற்பக்க மூலையில் பரீட்சையின் பெயர் அதாவது, "கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" என்பது தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(ஈ) பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை ஒப்புக்கொள்ளப்படும். விண்ணப்ப முடிவுத் தேதியிலிருந்து 3 கிழமைக்குள் ஒப்புக் கோடலைப் பெறுவிடின் உடனடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இது பற்றிய விசாரணைகள் செய்யத் தவறின் பரீட்சார்த்தி பரீட்சை எடுக்கும் உரிமையை இழக்க நேரிடும்.

**5. பரீசார்த்திகளின் தகைமை**

இ (I), (II) இற் கூறப்பட்ட சேவைக்காலம், தகைமைக்காகக் கணிக்கும் தேதி 1973 யூலை 21 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**8. தெரிவு செய்யும் முறை**

இப்பரீட்சை (1) எழுத்துப் பரீட்சை, (2) வாய்மொழிப் பரீட்சை என இரு பகுதிகளாக நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சை 1973 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் 24 ஆம், 25 ஆம் தேதிகளில் கொழும்பில் நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சைக்குப் பின்னர் விண்ணப்பகாரர்களுக்கு அறிவிக்கப்படும் தேதியில் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சையில் போதிய அளவான உயர் தரத்தையடையும் விண்ணப்பகாரர்களுக்கு மட்டும் இப்பரீட்சை நடாத்தப்படும்.

1973 யூன் 8 இன் 63 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இப்பரீட்சை சம்பந்தமான அறிவித்தலில் கூறப்பட்ட ஏனைய நிபந்தனைகளும் விடயங்களும் மாற்றமின்றித் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

பி. எச். சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7. 1973, யூலை 6 ந் தேதி.

இலங்கைப் பரீட்சைப் பகுதி

**கணக்காளர் சேவையின் IV ஆம் வகுப்பு நியமனத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை—1973**

சுட்டிலக்கம் :————————

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. (1) சொந்தப் பெயர் முதல் எழுத்துக்களுடன் :————.
 (2) முதல் எழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :————.

2. பூரண முகவரி :————.

3. பால் :————.

4. நீர் பிறப்பினால் இலங்கைப் பிரசையா, அல்லது பதிவு செய்யப்பட்டதினாலா :————.

5. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:————.
 (i) கணக்குப் பதிவியலும் கணக்கியலும் :————.
 (ii) கணக்காய்வு :————.
 (iii) வாணிப கணிதம் :————.
 (iv) ஆக்கச் செலவு கணக்கியல் :————.
 (v) பொருளியலும் பொது நிதியும் :————.
 (vi) அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளும் நிதி நடைமுறைகளும் :————.

6. 5 இ(II) ஆம் பிரமாணத்தின்படி பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் :————.

(1) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகவுபெறுவதற்காகப் பெறப்பட்ட தகைமைகளையும் அத்தகைய தகைமைகள் எந் நிறுவகத்திலிருந்து பெறப்பட்டனவென்பதையும் சித்தியெய்திய இறுதிப் பரீட்சையை அல்லது அதன் பகுதிகளைக் கூறுக :————.

(ii)

| சேவைசெய்த திணைக்களங்கள் | பதவி | தொடக்கம் | வரை | காலம் |
|---|---|---|---|---|
| 1. ............ | ............ | ...... | ...... | ...... |
| 2. ............ | ............ | ...... | ...... | ...... |
| 3. ............ | ............ | ...... | ...... | ...... |

7. 5 இ(1) ஒழுங்குவிதிகளின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் :
 (i) சேவை/பதவி :————.
 (ii) தரம்———— ஆம் தேதி தொடக்கம்————
 (iii) வகுப்பு———— ஆம் தேதி தொடக்கம்————
 (iv) 1973.7.21 அன்று உள்ளபடி (அ) அரசாங்கத்தின் கீழ் கடமையாற்றிய சேவைகாலம்————. வருடம்————. மாதம்————.

(ஆ) மேற்கூறியவாறு II ஆந் தரத்திலும் III ஆந் தரத்திலும் சேவைசெய்த காலம் :

(II) ———— வருடம்———— மாதம்
(III) ———— வருடம் ———— மாதம்.

(v) 1973.7.21 அன்று வருடாந்தச் சம்பளம் ரூபா:————

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை பாதுகாப்பான முறையில் ஒரு பக்கத்தில் மட்டும் பசையிட்டு ஒட்டவும்.

9. பரீட்சார்த்தியின் உறுதியுரை :

இப் பத்திரத்திற் கொடுக்கப்பட்ட தகவல்கள் யாவும் என் அறிவுக்கு எட்டியவரை உண்மையானவையெனவும் பரீட்சைக் கட்டணத்துக்காகச் செலுத்திய ........... திகதியிட்ட ........... இலக்கப் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இப்பரீட்சையின் பிரமாணங்களின்படி இயைய ஒழுகுவதற்கும் இப்பரீட்சைப் பிரமாணங்களின்படி நான் தகுதியற்றவரெனக் காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தகைமையை நிராகரிப்பதற்கான எத்தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

தேதி :————.

10. දෙපාර්තමේන්තු ප්‍රධානියාගේ සහතිකය :

මෙම ඉල්ලුම් පත්‍රය ඉදිරිපත් කරන ................................ නමැති අයදුම්කරු ................................වැනි දින සිට මෙම කාර්යාලයේ සේවය කරන බවත්, ඔහුගේ වැඩ සහ හැසිරීම නිරන්තරයෙන්ම සතුටුදායක බවත් ඉහත 7 වැනි කොටුවෙහි සඳහන් කර ඇති තොරතුරු සියල්ලම මෙම කාර්යාලයේ ඇති වාර්තා ආශ්‍රයෙන් මම පුද්ගලිකවම පරීක්ෂා කර බැලූ බවත්, ඒවා නිවැරදි බවත් 1973............ මස ............වැනි දින ඔහු/ඇය මා ඉදිරිපිට දී අත්සන් කළ බවත් මෙයින් සහතික කරමි.

........................,
දෙපාර්තමේන්තු ප්‍රධානියාගේ අත්සන.

දිනය :......................
සහතික කරන අයගේ සම්පූර්ණ නම :....................................
පදවිය :....................................
ලිපිනය :....................................................

7-155—06.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 67

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# இலங்கைக் குடியரசு வர்த்தமானி

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விவம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளப்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறேக்ரருல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்சே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

**இவைகளின் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படு அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரபபோகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விளம்பரதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட்ட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | 6.7.73 | வெள்ளி | .. | 27.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 13.7.73 | வெள்ளி | .. | 4.7.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 20.7.73 | வெள்ளி | .. | 11.7.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.7.73 | வெள்ளி | .. | 18.7.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **ஓகத்து** | .. | 3.8.73 | வெள்ளி | .. | 25.7.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 10.8.73 | வெள்ளி | .. | 1.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 17.8.73 | வெள்ளி | .. | 8.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 24.8.73 | வெள்ளி | .. | 15.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 31.8.73 | வெள்ளி | .. | 22.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **செத்தெம்பர்** | .. | 7.9.73 | வெள்ளி | .. | 29.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 14.9.73 | வெள்ளி | .. | 5.9.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 21.9.73 | வெள்ளி | .. | 11.9.73 | செவ்வாய் | .. | ந.ப. 12.00 |
| | | 28.9.73 | வெள்ளி | .. | 19.9.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.